**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 247/2019**

**வாதி தரப்பு சாட்சி–1 தாயுமானசுவாமி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1, 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் 11ம் வகுப்பு படித்துள்ளேன். இவ்வழக்கை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை நான்தான் கிரையம் வாங்கினேனா என்றால் ஆமாம். நான் கிரையம் வாங்கிய போது நான்குபுறமும் அளவீடு செய்துதான் கிரையம் வாங்கினேனா என்றால் ஆமாம். அவ்வாறு அளவீடு செய்ததன் அடிப்படையில்தான் எனது கிரைய ஆவணம் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அளவீடுகளை வழக்கறிஞரிடம் நான்தான் சொன்னேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் பழைய சர்வே எண் 362/1A என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்திலும், தாவா சொத்தின் பழைய சர்வே எண் 362/1A என்றுதான் கண்டுள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண் 362/1A விற்கான புதிய சர்வே எண் 469 என்றால் சரிதான்.

2) சர்வே எண் 469 ல் 13 உட்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 469/7 என்பதுதான் தாவா சொத்து மற்றும் எனது சொத்து என்றால் சரிதான். சர்வே எண் 469/6 தாவா சொத்திற்கு மேற்குபுறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 469/6ல் தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும வா.சா.ஆ.1 எனது கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கிழமேல் ஜாதியடி 18, தென்வடல் ஜாதியடி 333 என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்கெல்லைக்குள் உள்ள சொத்தைத்தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி எல்லைக்குள் உள்ள சொத்தை தவிர அருகில் உள்ள வேறு சொத்துக்களில்

எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2 அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

3) 2 அயிட்ட சொத்துக்களும் வா.சா.ஆ.1ல் கண்டுள்ள அளவுகளுக்குள்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்குரையில் தென்வடல் கிழபுறமும், மேற்குபுறமும் 333 சதுர அடியும், தென்வடல் தெற்குபுறமும் 333 சதுர அடியும் என கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. தாவா மாதிரி வரைபடத்தில் வடபுறம் கிழமேல் 23 அடி என உள்ளது என்றால் சரிதான். தென்புறம் கிழமேல் 21 அடி என உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 7326 சதுர அடி என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் நான் கிரையம் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5994 என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் சுமார் 1409 சதுர அடி அதிகமாக இவ்வழக்கின் வழக்குரையில் போட்டுள்ளேன் என்றால், எனது அனுபவத்தில் உள்ள நிலத்திற்கு பட்டா போட்டு கொடுத்தார்கள்.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தாவா சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சர்வே எண் 469/7ற்கான கணினி பட்டாவில் இரயத்துவாரி மனை என கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரயத்துவாரி மனையை யார் அனுபவம்செய்து வருகிறார்களோ அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் 0.05.50 ஏர்ஸ் என பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 0.05.50 ஏர்ஸ் என்பது 13½ செண்ட் என்றால் அதுபற்றி தெரியாது. சதுர அடியில் மேற்படி நிலம் 5917 சதுர அடி என்றால் அதுபற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா B அயிட்ட சொத்தில் எனக்கு எவ்வித வேலியோ, சுற்றுச்சுவரோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) தாவா புல வரைபடம் தாக்கல் செய்தால் உண்மை விபரம் தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்த போது கிழக்குபுறமும், மேற்குபுறமும் 104.6 மீட்டர் இருந்ததா என்றால் தெரியவில்லை. தாவா சொத்திற்கு தென்புறம் 5.2 மீட்டர் அளவு அகலம், வடபுறம் 5.4 மீட்டர் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 5917 சதுர அடி என்றால் ஞாபகமில்லை. மேற்படி அளவு நிலத்திற்குத்தான் வருவாய்துறை அலுவலர்கள் எனக்கு பட்டா கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

6) மேற்படி அளவில்தான் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் உள்ளது என்றால் மீதி இடம் எனது அனுபவத்தில் உள்ளது. எவ்வளவு நிலம் எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியாக ஞாபகமில்லை. எனது அனுபவத்தில் அதிகப்படியான நிலம் உள்ளதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்குரை ஆவணங்கள்தான்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**